# தூத்துக்குடி மாநகராட்சி
## கூட்டப்பொருள்

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 26.11.2019 | 1) மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள "சீர்மிகு நகரம் (Smart City) தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மேற்கண்ட "சீர்மிகு நகரம் (Smart City) திட்டத்தினை தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மாந2) அரசாணை எண் (MAII) எண்.112 நாள் 31.07.2015ல் கண்டுள்ள அரசாணையில் உத்தரவிட்டுள்ளது.<br>அதன்பேரில் தலைவர், தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிடெட் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிர்வாக குழு கூட்டம் நடவடிக்கை எண். 06.06. நாள் 22.10.2019இல் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. | 200) பதிவு செய்யப்பட்டது. |
| வ.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ .லட்சத்தில்) |
| 1 | தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் 8 முக்கிய இடங்களான 1 ) ஏ.பி.சி. கல்லூரி 2) அமெரிக்கன் மருத்துவமனை 3) தந்தி ஆபீஸ் ரோடு 4) அரசு பாலிடெக்னிக் 5) திரு.வி.க. நகர் 6) செயின்ட் மேரிஸ் பள்ளி, 7) ஜிம்கானா கிளப் 8) கோட்டாட்சியர் அலுவலகம் ஆகிய பகுதிகளில் நவீன பேருந்து நிழற்குடை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல். | 250.00 |
| | **மொத்தம்** | **250.00** |
| | எனவே தூத்துக்குடி மாநகராட்சிப்பகுதியில் மேற்காணும் பட்டியலில் கண்டுள்ள 8 முக்கிய இடங்களில் நவீன பேருந்து நிழற்குடை அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட ரூ. 250.00 லட்சம் மதிப்பீட்டில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும், மேலாண்மை இயக்குநர், தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிட் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட செயல்முறை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>இ1/3209/2015 (Bus shel) | |
| | 2) மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள "சீர்மிகு நகரம் (Smart City) தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மேற்கண்ட "சீர்மிகு நகரம் (Smart City) திட்டத்தினை தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மாந2) அரசாணை எண் (MAII) எண்.112 நாள் 31.07.2015ல் கண்டுள்ள அரசாணையில் உத்தரவிட்டுள்ளது. | 201) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அதன்பேரில் மேலாண்மை இயக்குநர், தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிடெட் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிர்வாக குழு கூட்டம் நடவடிக்கை எண். 06.06. நாள் 22.10.2019இல் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. | |
| வ.எண். | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ .லட்சத்தில்) |
| | தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான 5 இடங்களான 1) சுந்தரவேல்புரம் 2) முத்தம்மாள் காலனி 3)புல்தோட்டம் 4) தரைமட்ட நீர்த்தேக்கத்தொட்டி வளாகம், 5) அசோக் நகர் ஆகிய இடங்களில் இறகுபந்து உள்விளையாட்டு அரங்கம் மற்றும் உடற்பயிற்சி மையம் கட்டுதல். | 6.00 |
| | **மொத்தம்** | 6.00 |
| | எனவே தூத்துக்குடி மாநகராட்சிப்பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான மேற்கண்ட இடங்களில் இறகு பந்து உள்விளையாட்டு அரங்கம் மற்றும் உடற்பயிற்சி மையம் கட்டும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட ரூ.6.00 கோடி மதிப்பீட்டினை ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும், மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/3209/2015 (Badm)) | |
| | 3) தூத்துக்குடி மாநகராட்சியில் பழைய மாநகராட்சி பகுதிகளான 40 வார்டுகளில் (வார்டு எண்.4,6 முதல் 16 வரை 19 முதல் 33 வரை மற்றும் 47 வரை) உள்ள தெருவிளக்குகளை தனியார் மூலம் இயக்கி பராமரிப்பு செய்யும் பணியினை மதிப்பீடு விலை விகிதத்தினை விட 1.10% குறைவான விலை விகிதம் கொடுத்த சுதா இன்ஜினியரிங் தூத்துக்குடி நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று தீர்மான எண். 85 நாள் 14.5.2018ல் மாமன்றம் ஒப்புதல் வழங்கியதற்கிணங்க வேலை உத்தரவு 07.06.2018ல் வழங்கப்பட்டு தொடர்ந்த ஓராண்டு காலம் மேற்படி நிறுவனத்தாரால் நல்ல நிலையில் செய்து வரப்படுகிறது. இந்நிலையில் நிர்வாக நலன் கருதி பணியின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி நிறுவனத்தாருக்கு மேலும் மூன்று மாத காலத்திற்கு 13.05.2019ல் பணி நீட்டிப்பு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்படி நிறுவனத்தார் தமது 19.09.2019ம் தேதிய கடிதத்தில் தற்போது சந்தை விலையேற்றம் காரணமாக மிகுந்த சிரமங்கள் ஏற்படுவதாகவும் இதனடிப்படையில் ஏற்கனவே 03.04.2018ம் தேதிய ஒப்பந்தப்புள்ளியில் வழங்கி மாமன்றத்தால் ஒப்புதல் வழங்கப்பட்ட விலையினை ஏற்றி வழங்க கோரியுள்ளார்.<br>மேலும் மேற்படிக்கான மதிப்பீடானது 2017–18ம் ஆண்டிற்கான பொதுப்பணித்துறையின் தரப்படுத்தப்பட்ட விலைவிகிதம் மற்றும் உள்ளூர் சந்தை விலை விகிதத்தில் அடிப்படையில் தயார் செய்யப்பட்டதாகும். இதன்பின்னர் 2018–19 மற்றும் 2019–20 ஆகிய இரண்டு நிதியாண்டு விலை விகிதங்கள் வரப்பெற்றுள்ள நிலையில் 2017–18விலை விகிதங்களுக்கும் 2018–19 & 2019-20 ஆகிய இரண்டு நிதியாண்டு | 202) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 ஒப்புதல் வழங்கப்பட்டது. அலுவலகக் குறிப்பு 3 பின்னேற்பு வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | தரப்படுத்தப்பட்ட விலை விகிதம் பொதுப்பணித்துறையில் வழங்கப்பட்டு நடைமுறையில்இருந்து வருகிறது.<br>இதனடிப்படையில் பொதுமக்களின் அடிப்படை அத்தியாவசியப் பணிகளில் தொய்வு ஏதும் இல்லாமல் சீரான நிலையில் பராமரிக்க வேண்டியதன் அத்தியாவசியம் கருதி மாமன்ற தீர்மான எண்.85 நாள் 14.05.2018ல் இப்பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்ட மேற்படி நிறுவனத்தார் வழங்கிய விலை விகிதத்திலிருந்து கூடுதலாக 5% சதவீதம் மட்டும் விலையேற்றம் செய்து வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) பொதுமக்களின் அடிப்படை அத்தியாவசிய தெருவிளக்கு பணியின் அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் ஏற்கனவே ஒப்புதல் வழங்கப்பட்ட விலை விகிதத்திலிருந்து 5% மட்டும் விலையேற்றம் செய்து தொகையினை வழங்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>2) இந்த விலையேற்றத்தினால் ஏற்படும் கூடுதல் செலவினத்திற்கும் மேலும் நகரில் அனைத்து தெருவிளக்குகளையும் மின் ஆற்றல் சேமிப்பு கொண்ட விளக்குகளாக மாற்றம் செய்யும் பணிகள் ஆரம்பித்து முடிவடையும் காலம் வரையிலும் அதாவது அடுத்த ஓராண்டு காலத்திற்குள் அவசியம் ஏற்படும்பட்சத்தில் மேற்படி நிறுவனம் மூலம் தெருவிளக்குகளை 40 வார்டு பகுதிகளிலும் இயக்கி பராமரிக்கும் பணியை செயல்படுத்திடவும் இதற்கு அகும் தோராய கூடுதல் செலவினம் ரூ. 987.92 இலட்சத்தினை (93.26+4.66) பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>3) மாமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>ந.க.எண்.8242018.இ3 | |
| | **5)** தூத்துக்குடி மாநகராட்சியில் பாதாளச்சாக்கடைத்திட்டம் செயல்படுத்திட அரசாணை எண்(டி) எண் 448 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 11.11.2011ன் படி நிர்வாக அனுமதி அளித்து உத்திரவிடப்பட்டது. மேற்படி உத்திரவினைத் தொடர்ந்து தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவன கடித்தின் படி கீழ்கண்டவாறு கடன் மற்றும் மான்ய தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது. | |

| வ.எண் | விபரம் | அனுமதிக்கப்பட்ட தொகை (கோடியில்) | வரப்பெற்ற தொகை (கோடியில்) | த.கு.வ. வாரியததிற்கு வாங்கப்பட்ட செலவினத்தொகை (கோடியில்) | அனுமதிக்கப்பட்ட தொகையில் வரவேண்டிய தொகை (கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1 | கடன் (TNUDP III) | 24.46 | 22.50 | 22.50 | 1.96 |
| 2 | மான்யம் (TNUDP III) | 43.58 | 28.84 | 28.84 | 4.74 |

மேற்படி அனுமதிக்கப்பட்ட தொகையில் மேற்படி திட்டப்பணிகள் நடைபெற்று வந்த நிலையில் பாதாளச்சாக்கடைத் திட்டத்தின் பிரதான பணியான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மாநகராட்சிக்கு சொந்தமான புல்தோட்டம் பகுதியில் அமைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டது. இந்நிலையில் 2009ம் ஆம் ஆண்டில் மேற்படி பகுதிவாழ் மக்கள் தெரிவித்த ஆட்சேபனையின் காரணமாக மேற்படி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான மாற்று இடம் தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான தருவைக்குளம் உரக்கிடங்கு பகுதியில் தேர்வு செய்யப்பட்டது. மேற்படி இடத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க DBFOT முறையில் OMG & Wabag நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்ட நிலையில் ஆரம்பக்கட்ட பணி மட்டும் நடைபெற்று அதன்பின் பணியில் தொடர்நடவடிக்கை ஏதும் இல்லாமல் இருந்ததால் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தத்தை இம்மாநகராட்சி கடித எண் இ3.∴11512.∴2007 27.07.2016 ன் படி ரத்து செய்யப்பட்டது.மேலும் மான்யமாக அனுமதிக்கப்பட்ட ரூ.43.58 கோடியில் Public Private Partnership மூலம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்படுத்தப்படுவதால் ரூ.10.00 கோடியை மான்ய நிதியில் ரத்து செய்து ரூ.33.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் இதுநாள் வரை 28.54 கோடி மட்டுமே வரப்பெற்றுள்ளது.

தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டப்பணிகளில் கழிவுநீர்க் குழாய் பதிக்கும் பணிகள் 97%, சதவீதமும் மனிதகுழி மூடி அமைக்கும் பணிகள் 99%, சதவீதமும் வீட்டிணைப்பு குழாய் அமைக்கும் பணிகள் 95%, சதவீதமும் சாலைசீரமைப்பு பணிகள் 96% சதவீதமும் முடிவுற்றுள்ளது. இதுவரை மேற்கண்ட திட்டப்பணிக்கு மேற்கொள்ளப்பட்ட செலவீனம் ரூ.81.60 கோடி ஆகும தற்போது கழிவுநீர் சுத்திகா்ப்பு நிலையமானது ஸ்மாா்ட் சிட்டி திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெற்று வருகின்றன. **சிப்பம்-ஐ** ஸ்ரீராம் ஈ.பி.சி.நிறுவனத்தின் மூலம் 31.10.2014 வரை பணிகள் காலதாமதமாகவே நடைபெற்று வந்தது. பின்னா் 22.01.2019 முதல் பணிகள் தாமதமாகவே நடைபெற்று வருகிறது. **சிப்பம் II &III** 31.12.2017 முதல் தொடங்கப்பட்டு 13.11.2015ல் பணிகள் நடைபெற்றது. காலதாமதத்திற்காக ஒப்பந்தம் 11.12.2015ல் ரத்து செய்யப்பட்டது. ரத்து செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ள பணிகளில் மீதமுள்ள வேலைகளுக்கான ஒப்பந்தம் வரப்பெற்று 27.01.2017அன்று M/S VVV Construction க்கு வழங்கப்பட்டு தற்போது வரை பணிகள் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது. பிரதான குழாய் நீருந்து நிலையத்திலிருந்து தருவைக்குளம் சுத்திகரிப்பு நிலையம் வரை கழிவுநீர் குழாய் பதிக்கும் பணிகள் 18.11.2013 ஆரம்பிக்கப்பட்டு 30.09.2019வரை காலதாமதமாக நடந்து பணிகள் முடிவுபெற்றுள்ளது. புல்தோட்டத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தம் உறுதிசெய்யப்பட்டு 22.07.2009 வேலை உத்திரவு வழங்கப்பட்டது. 7.6.2010 நடந்த மக்கள் எதிர்ப்பினால் பணிகள் நிறுத்தப்பட்டு பின்னா் அந்த ஒப்பந்தம் 13.01.2012 ம் ஆண்டு ரத்துசெய்யப்பட்டது. இதற்கான செலவீட்டுத் தொகை ரூ2.64 கோடியை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வழங்குவதற்கு மாமன்ற தீா்மானம் எண்281.நாள்: 19.01.2011 அன்று தீா்மானிக்கப்பட்டது.

தற்போது மேற்படி பணிகள் தொடர்ந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நடைபெற்று வருகின்ற வேலையில் அதற்கான செலவினத்தொகையினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டியுள்ளதால், தற்போது மேற்படி திட்டபணிகள் அனுமதிக்கப்பட்ட கடன் மற்றும் மான்ய தொகை பெறும் கால

| | | |
|---|---|---|
| | அளவினை 30.06.2020வரை நீட்டிப்பு செய்து தரக்கோரி தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>ந.க.எண்: இ3/11512∴.2007 | |
| | **6)**தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட மேலூர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் சத்துணவு அமைப்பாளராக பணிபுரிந்து வரும் திரு.M. வேலம்மாள் அவர்கள் மாற்றுத்திறனாளி என்பதால் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்க கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்துள்ளார்.<br>தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்ட விதி 169 (H)ன்படி மனுதாரரரின் உடல் பாதிப்பு 40%க்கும் அதிகமாக உள்ளதாலும் அரசு ஆணை எண் TAMILNADU GOVERNMENT GAZETTE 15.06.1992 Part IV Section – 2 Serial No. 30ன் படியும் திரு. Aமைதீன்பீவி அவர்களுக்கு 2019–2020 இரண்டாம் அரையாண்டு முதல் தொழில் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். அ1/1455/19/கி.ம. | **205)** அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது |
| | 7) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண். 73 நாள் 19.07.2018 மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண். 76 நாள் 26.07.2018 ஆகிய அரசாணைகள் மூலம் 01.04.2018 முதல் மேல்படுத்தப்பட்ட பொது சொத்து வரி சீராய்வு நிறுத்தம் செய்து (with hold) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.4) துறை அரசாணை நிலை எண். 150 நாள் 19.11.2019 தேதியிட்ட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.<br>மேற்படி அரசாணையில் அங்ஙனம் 01.04.2018 முதல் அமல்படுத்தப்பட்ட சொத்து வரி சீராய்வின் மீது பொது மக்கள், குடியிருப்போர் நலச்சங்கங்கள் மற்றும் வணிக சங்கங்கள் போன்ற பல்வேறு தரப்பிலிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளை ஆய்வு செய்யும் வகைக்கு கீழ்க்கண்ட அலுவலர்களை கொண்ட குழு ஒன்று அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது.<br><br>வ.எண். \| பதவியின் பெயர் \| குழுவில் வகிக்கும் பதவி<br>1 \| அரசு முதன்மை செயலர் நிதித்துறை (செலவுகள்) \| தலைவர்<br>2 \| நகராட்சி நிர்வாக அணையர் \| உறுப்பினர்<br>3 \| இயக்குநர், பேரூராட்சிகள் \| உறுப்பினர்<br>4 \| ஆணையர், சென்னை பெருமாநகராட்சி \| உறுப்பினர்<br><br>மேற்படி அலுவலர் குழுவின் அறிக்கை பெற்று அதன் மீது அரசால் முடிவுகள் எடுக்கும் வரை 01.04.2018 முதல் மேற்கொள்ளப்பட்ட பொது | 206) பதிவு செய்யப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | சொத்து வரி சீராய்வினை நிறுத்தி வைக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை எண் 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா 4) துறை நாள் 19.11.2019 மாமன்றத்தின பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் பதிவு செய்யலாம். அ1/0336/2018 | |
| | 8) தூத்துக்குடி மாநகராட்சிக்கு எதிராக பல்வேறு வழக்குகள் உள்ளூர் நீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்களில் பல்வேறு வகையான வழக்குகள் தொடரப்பட்ட நிலுவையாக இருந்து வருகிறது. இம்மாநகராட்சிக்கென சட்ட அலுவலர் பணியிடம் ஏதும் அனுமதிக்கப்படாததால் வழக்குகளை உரிய ஆவணங்களுடன் சட்ட ரீதியாக எதிர்கொள்ள இயலாத நிலை உள்ளது.எனவே வழக்குகளின் தன்மைகேற்ப மேற்கொள்ள வேண்டிய ஆரம்ப நடவடிக்கைகளான பத்திவாரியான குறிப்புகள் மற்றும் எதிர்வாதுரை தாக்கல் செய்வதற்கான பணிகளில் தேக்க நிலை ஏற்பட்டு வருகிறது. மேலும் தொடர் நடவடிக்கைகள் உரிய காலங்களில் மேற்கொள்ளாததன் காரணமாக வழக்குகளின் தீர்ப்புகள் மாநகராட்சிக்கு பாதகமாக அமையும் சூழலும் இருந்து வருகிறது. எனவே இவ்வழக்குகளை முறையாக எதிர் வழக்காடவும் மற்றும் தேவையான தீர்வுகளுக்கு மேல் முறையீடு செய்வதற்கும் மற்றும் பிரத்யேக நேர்வுகளில் சட்ட கருத்துரு கொடுப்பதற்கு ஏதுவாக தூத்துக்குடி மாவட்ட நீதிமன்றத்தில் பார் கவுன்சிலிங்—ல் பதிவு செய்து வழக்கறிஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்று அதில் தகுதி உடையவரை தேர்வு செய்வதற்கு நாளிதழ் பிரசுரம் மற்றும் மாவட்ட நீதிமன்றத்திற்கு கடிதம் எழுதப்பட்டு அதன் தொடர்சசியாக 11 நபர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டு 23.09.2019 அன்று வருகை தந்த 8 வழக்கறிஞர்களிடம் உரிய சான்றுகள், பயிற்சி மற்றும் அனுபவங்கள் குறித்து நேர்காணல் நடத்தப்பட்டது.<br>மேற்படி நடத்தப்பட்ட நேர்காணலில் கலந்து கொண்ட கீழ்க்கண்ட விபரப்படியான வழக்குறைஞர் தேர்வு செய்ய முடிவு செய்யப்பட்டது.<br><br>பெயர் – அ.சி. விஜயா (MS 2704/12)<br>படிப்பு – பி.ஏ. எம்.,எஸ்.<br>முகவரி – 22ஏ/1 இன்னாசியார்புரம்<br>தூத்துக்குடி.<br><br>இதன்படி மாநகராட்சி தொடர்புடைய வழக்குகளுக்கு தேவையான அடிப்படை நடவடிக்கைகள் மற்றும் தொடர் நடவடிக்கைகள எடுப்பதற்கு தேவையான பணிகளை நிறைவேற்றும்பொருட்டு இம்மாநகராட்சியின் சட்ட ஆலோசகராக தற்காலிகமாக நியமனம் செய்யவும், இவரது வழக்குரைஞர் கட்டணமாக மாதம் ரூ 20,000/— மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு.** மாமன்றம் உரிய ஒப்புதல் வழங்கலாம். சி1/553/2018 | 207)அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது. |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்.26.11.2019

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி